சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய நாகரிகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 20 வெள்ளிக்கிழமை (04 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 97

# தென்மாகாணத் தேர்தலில் வெல்ல அரசாங்கம் அதிகார துஷ்பிரயோகம்

## அரச வளங்கள் கட்சி நலனுக்கு பயன்படுவதாக குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச், 4

தென்மாகாண சபைத் தேர்தலில் வெற்றி ஈட்டும் நோக்குடன் ஆளுங்கட்சி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகவும்—

கட்சியின் அரசியல் நலனுக்காக அரச வளங்களைப் பயன்படுத்தி மக்களின் வாக்கைப் பெறுவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்வதாகவும்—

தேர்தலை முன்னிட்டு, முன்னர் கைவிடப்பட்டிருந்த சில அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதாகவும்—

மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் திரு. அமரசிறி தொடங்கொட குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனக்கு ஆதரவு குறைவாக உள்ளது என்பதைத் தெரிந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி நிவாரணம், வேலை வாய்ப்பு, வீடமைப்புக் கடன் என்பவற்றைத் தருவதாக வாக்குறுதி அளித்து மக்களை ஏமாற்றும் மோசடியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கட்சியின் தேர்தல் நலனுக்காக அரச வளங்கள் பிரசாரம், மற்றும் ஆதரவு தேடும் வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் திரு. தொடங்கொட தெரிவித்தார்.

கிழக்குத் தேர்தலில் ஆளுங் கட்சியினர் அரச வளங்களைப் பயன்படுத்தியும், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தும் ஆதரவு தேடிய போதிலும் ஐம்பது சதவீதத்துக்கும் குறைந்த உள்ளூராட்சி சபைகளிலேயே வெல்ல முடிந்தது என்றும்—

அதன் மூலம் அப்பகுதி மக்கள் அரசுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர் என்றும் — முன்னாள் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் மோசடிகளில் மிகப் பெரிய அளவில் ஈடுபட்ட போதிலும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறமுடியவில்லை என்றும் —

அதே போலவே தென்மாகாண சபைத் தேர்தலும் ஆளுங்கட்சி தோல்வி அடையும் என்றும் — அமரசிறி தொடங்கொட கூறினார்.

நேற்று நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (ஆ-6)

## ஆஸ்பத்திரிவளவில் விழுந்த சன்னங்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 4

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது, சன்னங்கள் பாதுகாப்பு வலயத்துக்குள், யாழ். போதனா வைத்தியசாலையின் சுவரிலும், ஜன்னலிலும் பட்டுத் தெறித்தன.

நேற்று முன்தினம் இரவு .00 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சன்னம் விழுந்த ஜன்னலுக்கு அருகில் இருந்த இரவுக் கடமை ஊழியர்கள் காயம் இன்றித் தப்பினர்.

அப்பகுதியில் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்ட சன்னம் ஒன்று ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது. (இ 15)

## கிழக்கு சுயேச்சை குழுக்கள் ஐ.தே.க. ஆதரவானவையாம்

### சிறிசேன கூரே கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 4

கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழுக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவானவையே. எனவே அவற்றுக்கு வாக்களித்தவர்களும் எமது ஆதரவாளர்களே.

அமைச்சர் சிறிசேன கூரே முன்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே இருக்கிறார்கள் என்பதைத் தேர்தல் முடிவுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன என்றும் அவர் கூறினார். (இ-எ)

## இராஜினாமா செய்யாதீர்கள்!

### அஷ்ரப்புக்கு ஆதரவாக புத்தளத்தில் பேரணி

கொழும்பு, மார்ச் 4

அஷ்ரப்பின் இராஜினாமா அறிவிப்பை அடுத்து நேற்று முன்தினம் புத்தளத்தில் முஸ்லிம் மக்கள் அவரது முடிவை மாற்றிக் கொள்ளுமாறு கோரி, பேரணி ஒன்றை நடத்தினர்:

குறிப்பிட்ட ஆறு பிரதேச சபைகளில் ஒரு பிரதேச சபை
(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை ஏமாற்றும் உத்தியே அஷ்ரப்பின் புதிய அறிவிப்பு

### அமைச்சர் மன்சூர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 4

நாடாளுமன்றத்தில் இருந்து ராஜினாமாச் செய்யப்போவதாக திகாமடுல்ல எம்.பியும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம். எச். எம். அஷ்ரப் வெளியிட்ட புதிய அறிவிப்பு, மக்களை ஏமாற்றுவதற்கான இன்னோர் உத்தியாகும்.

இவ்வாறு அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கடந்த செவ்வாய் நடந்த கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் மன்சூர் – அஷ்ரப் தனிப்பட்ட போட்டியே காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-6)

## தொண்டமானாறில் இரவில் பொம்மர்கள் குண்டு வீச்சு!

தொண்டமானாறு பெரியமலைப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9-30 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

பொம்பர்கள் சந்நிதி கோயில் சூழல் பகுதியை மையமாகக் கொண்டு பல தடவைகள் வட்டமிட்டு, பின்னர் கோயிலின் வடக்குப் பக்கமாக பெரியமலை என்ற இடத்தில் தாக்குதலை நடத்தின. குண்டுகள் கடலில் வீழ்ந்து வெடித்தாகத் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த விமானங்கள் இரண்டும் வல்லைப் பகுதியை வட்டமிட்டுவிட்டுச் சென்றன. (ஒ-155-178)

## பாடசாலைகளில் ஆங்கில வாரம்

### கல்வி அமைச்சு சுற்று நிருபம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

பாடசாலைகளில் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாதந்தோறும் ஆங்கில வாரம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை கல்வி அமைச்சு செயலாளர் வீரக்கொடி யாழ். கல்வி அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

இதன் பிரகாரம் —

மாதந்தோறும் ஒவ்வொரு வாரம் ஆங்கில வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டு ஒவ்வொரு வகுப்பிலும் பரீட்சை மற்றும் செயல்முறைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் ஒவ்வொரு வகுப்பிலும் ஆங்கில மாணவர் மன்றம் அமைக்கப்படும். (இ-3)

## தடை நீக்கப்பட்ட பின்பும் மீனவர் மீதான தாக்குதல் தொடர்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 4

நேற்று நண்பகல் 12.30 மணி முதல் கல்முனைக் கடற்பரப்பில் ரோந்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினரின் பீரங்கிக் கப்பல் ஒன்று பீரங்கித் தாக்குதலை நடத்தியது.

நேற்று முன்தினம் நள்ளிரவு இப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் படகுகள் மீது ஸ்ரீலங்கா வான்படை ஹெலி ஒன்று 50 கலிபர் தாக்குதலை நடத்தியது.

இதனால் மீனவர்களின் உடமைகள் சேதமடைந்தன.

ஹெலியின் சத்தத்தையடுத்து மீனவர்கள் கடலில் பாய்ந்ததால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

கடல்வலயச் சட்டம் நீக்கப்பட்டதாக யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்ட பின்னரும் கூட தாம் வழமையாக மீன்பிடிக்கும் இடங்களிலேயே மீன்பிடிப்பதாகவும்—

இருந்தும் ஸ்ரீலங்கா படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதாகவும்—

தடைச்சட்டம் நீக்கப்பட்டதாகக் கூறப்படுவது தமக்கான நிவாரணத்தை வெட்டுவதற்கான அரசின் நோக்கம் எனவும்— நேற்று முன்தினம் நள்ளிரவு ஹெலி தாக்குதலில் இருந்து தப்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

கடல்வலயச் சட்டம் நீக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்த பின்னரும் ஸ்ரீலங்காப் படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது குறித்து யாழ். அரச அதிபரிடம் கேட்ட போது, கடல் வலய தடை நீக்கம் பற்றிய விளக்கம் கேட்டு தான் அரசுக்கு செய்தி அனுப்பியுள்ளதாகவும்—

அதற்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை என்றும்— தெரிவித்தார். (இ-51-3)

## படையினர் புதிய பாணியில் தாக்குதல்

### ராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 4

கடந்த இரு மாதங்களில் 6 படையினர் மட்டுமே யுத்த முனையில் கொல்லப்பட்டுள்ளனர் 10 தாக்குதல் சம்பவங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. படையினரின் புதிய பாணியிலான தாக்குதலால் புலிகளின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா மேற்கண்டவாறு லங்காபுவத்துக்கு தெரிவித்துள்ளார்.

## மாகாணசபையின் நிர்வாகத்தில் அமைச்சர் தலையீடு என வழக்கு

கொழும்பு, மார்ச் 4

அரசமைப்பு பதின்மூன்றாவது திருத்தத்துக்கு முரணாக மேல் மாகாண சபையின் நிர்வாகத்தில் மத்திய அமைச்சர் ஒருவர் தலையிடுவதாகக் கூறி மேல் மாகாண சபை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி விசாரணை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தாதியர் பட்டதாரி பயிற்சி: படிவங்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மார்ச். 4

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தாதியர்களுக்கு பட்டதாரி கற்கை நெறியை அளிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தன.

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையப் பொறுப்பாளர் திரு. ச. ஆ. ஞானேந்திரன் விண்ணப்பப்படிவங்களை எடுத்து வந்துள்ளார்.

இந்த கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை கொக்குவிலுள்ள யாழ். அலுவலகத்தில் இன்று முதல் பெறலாம் என்றும்—

இப்பயிற்சி நெறிக்கான தெரிவுப் பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி அட்டையையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கனடா சர்வதேச அபிவிருத்தி ஏஜென்ஸியின் ஆதரவில் இயங்கும் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஓ-8)

## இன்று படகுச்சேவை

யாழ்ப்பாணம், மார்ச். 4

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஓ-3)

## இந்திய ஆயுதக் குழுவினர் இலங்கைக்குள் பிரவேசமா?

### செய்திக்கு தூதரக அதிகாரி மறுப்பு

கொழும்பு, மார்ச் 4

இந்தியாவில் இருந்து ஆயுதம் தரித்த குழு ஒன்று பாக்கு நீரிணையூடாக இலங்கைக்குள் நுழைந்திருப்பதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை இந்திய [illegible] மறுத்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய [illegible] யத் தூதரக அதிகாரபூர்வப் பேச்சாளர் இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

இந்திய ஆயுதக் குழுவினர் யாழ். குடாநாட்டினுள் நுழைந்துள்ளனர் என்ற [illegible] [illegible] பிட்டுள்ளார். (ஓ-எ)

## முச்சந்தி முரளி



பச்சைக் கட்சிக்காரர் விழுந்தாலும் மீசையில மண் ஒட்டாத கதை எல்லே விடுகினம்......!

## இரவு வேளையில் மக்களை பயமுறுத்திய விமானங்கள்!

தெல்லிப்பளை, மல்லாகம், அளவெட்டி, கட்டுவன், குப்பிளான் போன்ற பகுதிகளுக்கு மேலாக நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இரு பொம்மர்கள் பல தடவைகள் வட்டமிட்டன. இதனால் மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

விமானங்கள் இரண்டும் இடையிடையே குண்டு வீசவதைப் போன்று இரைச்சலுடன் பறந்து மக்களை அச்சுறுத்தின:

சுமார் இருபது நிமிடங்கள் வரை விமானங்கள் வட்டமிட்ட போதும், தாக்குதலை நடத்தவில்லை.

எனினும் இரவில் அப்பகுதிகளில் தங்கியிருக்கும் குறிப்பிட்ட சிலரும், பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்குச் சென்றனர். (ஒ-143)

## புலிகள் தன்னை எச்சரிக்கவில்லை என்று ஜெயலலிதா மறுக்கிறார்

புதுடில்லி, மார்ச் 4

1991 இல் நடைபெற்ற இந்திய பொதுத் தேர்தலின் போது, ராஜீவ் காந்தியுடன் தேர்தல் பிரசாரங்களுக்குச் செல்லவேண்டாம் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை விடுதலைப் புலிகள் முன்கூட்டியே எச்சரித்து இருந்தனர் என்று ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி முதவித்த குற்றச்சாட்டை செல்வி ஜெயலலிதா மறுத்திருக்கிறார்.

ராஜீவ் படுகொலையின் பின்னால் உள்ள சதியைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜெயின் ஆணைக் குழுவிடம் சமர்பித்துள்ள சத்தியக் கடதாசியில் இந்த மறுப்பை ஜெயலலிதா தெரிவித்தார்.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் குற்றச்சாட்டு பொய்யானதும், அரசியல் நோக்கம் கொண்டதும் என்றும் முதலமைச்சர் தமது சத்தியக் கடதாசியில் தெரிவித்திருக்கிறார்.

ராஜீவ் படுகொலையுண்ட தினம் தான் தமது சொந்த தொகுதியான பர்கூரில் இருந்ததாகத் தெரிவித்த ஜெயலலிதா, பர்கூருக்கான விஜயம் தமது மூல நிகழ்ச்சி நிரலில் இல்லாவிடினும், கட்சித் தொண்டர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே தாம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அலுவலகப் பொருள்கள் எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்குத் தேவையான அலுவலகப் பொருள்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு இணைப்புக்குழு அனுமதி மறுத்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இணைப்புக் குழுவில் வடக்கே பொருள்களை அனுப்புவதற்குப் பொறுப்பாக இருந்து வந்த அதிகாரி மாற்றப்பட்டு புதிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும்—

அதன் பின்னரே அலுவலகப் பொருள்கள் எடுத்து வருவதற்கான அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிறிய, பெரிய கட்டில்கள், ஆர். பி. கோ. குஷன் மெத்தை, ஆட்டுக்கல், அம்மி, மர உரல், மேசை, டைனிங் ரேபிள், அலுமாரி ஆகியன விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [29730]

அடை வைப்பதற்குகந்த லோமன் பிறவுண் முட்டைகள் விற்பனைக்குண்டு. பிளான் பரடைஸ், இல. 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (29729)

(B) பொயிலர், சலவை மெஷின், சாப்பாட்டு மேசை, ஸ்ரீல் அலுமாரி, கட்டில், ஜெனரேற்றர், உழுந்து அரைக்கும் கிறைண்டர் முதலியன விற்பனைக்குண்டு. சிறி குறிஞ்சி மெடிக்கல் அருகில், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (29695)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் பாடசாலைக்குக் கிட்ட 4 பரப்புக் காணி தனிக்கிணறு, குடியில்லாத வளவில் பனை, தென்னை உண்டு. கிழமை நாட்களில் பி. ப. 2—4 வரை தொடர்பு கொள்ளலாம். க. காசிப்பிள்ளை, அரச உத்தரவு பெற்ற நில அளவையாளர், சென்ற் ஆன்ஸ் ஒழுங்கை, மானிப்பாய். [7108]

### வீடு வளவு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் தெற்கில் உள்ள பல வசதிகளுடன் அமைந்த ''ராஜ் மஹால்'' என்னும் 5 பரப்பில் உள்ள வீடு விற்பனைக்கு உள்ளது. விரும்புவோர் விரைவில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: டாக்டர் த. விஸ்வநாதன், கீரிமலை வீதி, சண்டிலிப்பாய். [7103]

### பஞ்சாங்கக் கையேடு

சுபநேர, சுபகரும, நாள் கோள், நற்பலன்கள் ஜனவரி 94 முதல் டிசம்பர் வரை வீரகேசரிவார ஜோதிட ஆய்வாளர் எஸ். தெய்வநாயகம் B. A. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-7297)

### கோழிக் கூடுகள்

புதிய இரட்டைத்தட்டுகள் கொண்ட கோழிக்கூடுகள் விற்பனைக்குண்டு இல. 14/1 பிளைச்சஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. (மகளிர் கல்லூரிக்கு சமீபமாக) (29722)

### தேவை

பாலர் கல்வி நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியையும், பயிலுனரும் தேவை. சான்றிதழ்களுடன் ஞாயிறு காலை 10 மணிக்கு நேரில் வரவும். இல 37, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். [29647]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தேவைப்படும் அறிவு மட்டம் வரை தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு: சனி, ஞாயிறு காலை 8-00 — 10-00 மணிக்குள். 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (6999)

### SPECIAL ENGLISH

Spoken English with Grammar, G A Q , N C.E Year 11 — 4, மற்றும் Asst English Teacher's Exam போன்றவற்றுக்கான புதிய விசேட ஆங்கில வகுப்புகள் வெள்ளி (4-3-94) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஆரம்பமாகின்றன. R, சிவலிங்கம் (Dip- in -Eng.) புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம். (29716)

### சந்திக்கவும்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த கீரிமலை, சிறாப்பர் மட ஓய்வூதியர் திருமதி சுந்தரவல்லி, இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலிக் காரியாலயத்திற்கு வரவும். Accounting Systems & Services (J) Ltd. (29732)

### தவறிவிட்டது

இருதய வடிவிலான சிறிய பிளாஸ்ரிக் பேழையுடன் சில நகைகள் 02-03-94 அன்று யாழ்ப்பாணத்திற்கும் மண்டானூடாக புலோலி தெற்கு வரையுள்ள பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். S. V. Anton, 1/7, Convent Road, Jaffna. (29725)

## மகளிர் தின போட்டிகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுவினால் நடத்தப்படும் மாவட்டமட்டப் போட்டிகள் நாளை காலை 8-30 மணிக்கு யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும்.

இதில் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் — மகளிர் குழு அங்கத்தவர்களுக்கான பேச்சு, உணவு தயாரித்தல், குழுப்பாடல் போட்டிகளும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-162]

# வெள்ளி விழா
## (04 - 06 - 1994)

### சுதுமலை அம்பாள் சனசமூக நிலையத்தின்

25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு

யாழ். மாவட்ட ரீதியில்

தாச்சி சுற்றுப் போட்டி A B ஆண்கள்
கரப்பந்தாட்டப் போட்டி (Over Game) ஆண்கள்
சைக்கிள் ஓட்டம் 25 மைல் ஆண்கள்
மரதன் ஓட்டம் 10 மைல் ஆண்கள்
மாட்டுவண்டி சவாரி A B C

- இறுதி நாள் நிலைய இல்ல விளையாட்டுகள்: கரப்பந்தாட்டம் காட்சி ஆட்டம் (Set off Game)
- விண்ணப்ப முடிவு திகதிகள்:
  கரப்பந்தாட்டம், தாச்சி: 15 — 03 — 1994
  சைக்கிள், மரதன், - மாட்டு வண்டிச்சவாரி: 31 — 03 — 1994
  விண்ணப்பங்கள் நேரிடையாகவோ அன்றி கடித மூலமோ பதிந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.
- போட்டிகள் ஆரம்ப திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்பு:
செயலாளர்,
அம்பாள் ச. ச. நிலையம்
காந்தி வீதி,
சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.

[29735]

## மற்றுமோர் அண்ணா தயாரிப்பு
# திடீர் தோசை மா

250 கிராம் கொண்ட மாப் பைக்கட்டிலிருந்து 14 தோசை சுடமுடியும். 250 கிராம் மாவை எடுத்து அளவான தண்ணீர், உப்பு சேர்த்து உடனடியாகவே தோசை சுடலாம். விரும்பினால் நேரம் கழித்தும் சுடலாம்.

கிடைக்குமிடம்:

## அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம் திருநெல்வேலி, இணுவில்

(சி/7429)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 | 02 |
| 12 | 02 |
| 1932 | 1994 |

## அமரர் சதாசிவம் கார்த்திகேசு
(V. S. K. S. சுருட்டுப் பணிமனை உரிமையாளர்)

அருள் ஒழுகு கண்ணும் அன்பின் இருப்பிடமும் பொதுவான வேலைகளில் பின்னடையாத் திறனும் தொண்டும் என்று சிறப்புற்று வாழ்ந்தீர் பார்த்திருந்த எம்மிடம் சொல்லாமல் பிரிந்தீரே படைத்தவன் பாதங்கள் அடைக்கலமாயிடாவோ.

எங்கள் குலவிளக்கு அணைந்த செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்து, இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களுக்கு எமது நன்றிகளை நவில்கின்றோம். இன்றைய ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி உருக்குமணி கார்திகேசுவும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினரும்.

9/12, திருமகள் வீதி,
நாயன்மார்கட்டு.

## யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின்
# மேய்ப்புப்பணி மகா நாடு

10. தேசிய மேய்ப்புப் பணி மகாநாட்டிற்கு யாழ் மறை மாவட்டத்தின் பங்களிப்பு என்ன?
    1. பல வினாக் கொத்துக்கள் யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மக்களிடம் நிரப்பி எடுக்கப்பட்டு கொழும்பு தேசிய மகா நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது
    2. புதுப்பித்தல் பற்றிய தனிப்பட்ட கருத்துக்களை 19, பங்கோம் பிளேஸ், கொழும்பு-8 என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.
    3. யாழ் மறை மாவட்ட மகாநாட்டின் அறிக்கைகளை தேசிய மகா நாட்டிற்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.
    4. தேசிய மகா நாட்டிற்கு பிரதிநிதிகளை அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.

11. இரண்டு சுற்று மடல்கள் வெளிவந்துள்ளன என்று சொன்னீர்கள் அப்படித் தானே?

    ஆம். ஒன்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் திருமடல். அதில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் 13 ஆயர்களும் ஒப்பமிட்டுள்ளனர். யாழ். ஆயர் அவர்களின் பணிப்புரையின் படி அத்திருமடலின் முக்கிய பகுதிகள் அச்சிடப்பட்டு ஒரு ஞாயிறு தினத்தில் யாழ். மறை மாவட்டத்தின் சகல கோயில்களிலும், சிற்றாலயங்களிலும் இறை மக்களுக்கு வாசிக்கப்பட்டு பங்குத் தந்தையர்களால் விளக்கப்பட்டுள்ளது.

12. மற்றையது யாழ். ஆயர் அவர்களால் யாழ். மறை மாவட்டத்தின் குருக்கள், துறவியர், பொது நிலையினர்க்கு விடுக்கப்பட்ட சுற்று மடல் தானே.

    ஆம். அதே தான். அதுவும் ஞாயிறு திருப்பலியின் போது யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க இறை மக்கள் அனைவர்க்கும் வாசித்து விளக்கப்பட்டுள்ளது.

13. யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் விடுத்த அச் சுற்று மடலின் சில முக்கிய பகுதிகளைத் தர முடியுமா?

    திருத் தந்தையின் அழைப்பிற்கேற்ப கூட்டப்படும் இம் மகாநாடு தேசிய ரீதியில் இரண்டாவது என்று தெரிவிக்கும் ஆயர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன் முதலாவது தேசிய மறைப் பணிச் சங்கம் நடந்த பின் ஏற்பட்ட மாற்றங்களை சீர் தூக்கிப்பார்க்கிறார். இம் மாற்றங்கள் எம் மறை வாழ்விலும் பல சவால்களைத் தந்துள்ளன என்கிறார்.

14. இம் மாற்றங்களும் சவால்களும் எவை என சற்று விளக்கமாகச் சொல்ல முடியுமா?

    ''போராட்டங்களும், நாடுகளின் பிரிவினையும், அகதிகள் இடப்பெயர்ந்தோர் பிரச்சினைகளும், ஒழுக்க சீர் குலைவுகளும், வறுமையும் மட்டு மீறிய தன்னலப் பற்றும்......'' என்று இவ்வாறான மாற்றங்கள் எம் மறை வாழ்விலும் சவால்களைக் கொண்டு வந்துள்ளன என்கிறார்.

15. யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப் பணி மகா நாட்டின் நோக்கம் தேசிய மகா நாட்டின் நோக்கத்தை விட வேறுபட்டதா?

    இல்லை. நோக்கம் ஒன்று தான். ''தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபையை நோக்கி'' என்னும் மையப் பொருள் இலங்கை ஆயர் மன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டது. இதுவே யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப் பணி மகா நாட்டின் ஆய்வுத் தலைப்புமாகும்.

அன்பளிப்பு:

இயக்குநரும், பணியாளர்களும்,
யாழ். மனித முன்னேற்ற -
நடுநிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

பொது மக்கள் தொடர்புக் குழு,
மேய்ப்புப் பணி மகாநாடு.

[சி-7299]

வடபிராந்திய
யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்
விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்
# இடமாற்றம்

அன்புடையீர்!

ஹோட்டல் ஞானம்ஸில் நடைபெறவிருந்த எமது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம், தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம் மாற்றப்பட்டுள்ளது.

''மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாஜம்'' (பயிற்சிக் கல்லூரி) 14, மணிக்கூட்டு கோபுர வீதி, (மகாத்மாகாந்தி வீதி,) யாழ் (புற்று நோய் சிகிச்சை நிலையத்துக்கும், ஹோட்டல் அசோகாவுக்கும் அண்மையில்) 06 03-1994 காலை 9-30 மணிக்கு நிகழ்ச்சி நிரலின்படி கூட்டம் ஆரம்பமாகும். இடமாற்றத்தால் ஏற்படும் சிரமத்துக்கு மன்னித்து, அனைவரையும் வருக! வருக! என அழைக்கின்றோம்.

நன்றி

தங்கள் நல்வரவை விரும்பும்,
மு பத்மநாதன்
(செயலர்)

# மணமகன் தேவை

இந்து, 31 வயதுடைய, சிவந்த, அழகிய 5' 2'' உயரமுடைய B. S. M. S. பட்டதாரியும் தற்பொழுது கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருப்பவரும் புனர்பூசம் 1ஆம் பாத நட்சத்திரம் உடையவருமான மணமகளுக்கு மணமகன் தேவை. மணமகன் பட்டதாரியாகவோ, வங்கியில் தொழில் புரிபவர்களாகவோ அல்லது இதற்கு பொருத்தமான தொழில் புரிபவர்கள் சாதகக் குறிப்புடனும் முழு விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். சீதன விவரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

929, C/o உதயன்,

[7109]

# அறிவித்தல்

பன்றித்தலைச்சி
கண்ணகை அம்மன் கோயில்

## பங்குனித் திங்கள் திருவிழா

14-03-94 முதற் திங்கள் திருவிழாவை முன்னிட்டு 07-03-94 திங்கள் பகல் 2-00மணியளவில் வியாபாரம் செய்யும் கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். பணம் முழுவதும் கட்டி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்

தர்மகர்த்தா சபை,

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

(29737)

# விசேட அறிவித்தல்

பொலிகண்டி அருள்மிகு

## கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

தற்போது தர்மகர்த்தா சபையின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வாலயத்தில் திருப்பணிகளோ அன்றி அன்பளிப்புகளோ, அல்லது வேறு வகைகளில் உதவி செய்ய விரும்புவோர் மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையோடு தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்.
தர்மகர்த்தா சபை.

கந்தவனம் தேவஸ்தானம்,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(29739)

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியின்

## இதய அஞ்சலி

அமரர்

## சு. வைத்திலிங்கம் அவர்களின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

02-02-1994இல் சிவபதமடைந்த இருபாலையைச் சேர்ந்த திரு. சு. வைத்திலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி. (29740)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 02 |
| — | — |
| 11 | 02 |
| — | — |
| 1920 | 1994 |

## விதாசித்தம்பி ஆறுமுகம்
(குளியாப்பிட்டி பிரபல வர்த்தகர்)

எம்மை உருவாக்கி, தீபமாய் எரிந்த எம் ஆருயிர் தெய்வமே; பாசமிகு எம் தந்தையே! எல்லாம் அவன் செயலே! யாவும் இறைவன் திருவருளே! என நிதமும் உரைப்பாயே! உங்கள் பிரிவும் இறைவன் திருவிளையாடல் தானோ! உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்

55/1 சிவியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

(29746)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிக் கம்பன் கழகம் நடத்தும்

# கம்பன் விழாச் சிறப்பு மலர்



கம்பனுக்குத் தொண்டு கடவுளுக்குச் சேவை

## ஐம்புலன் வென்றார்தம் அருள் வாழ்த்து!

கம்பன் ஒரு மகாகவி. அவன் தமிழிற்குக் கிடைத்த ஒரு பெரும் சொத்து. தேவ பாஷையில் வான்மீகி தந்த காவியத்தை தமிழர்க்காக, அதன் சுவையும், பொருளும் குன்றாமல் ஆக்கித் தந்தவன். கம்ப காவியம் வெறும் இலக்கியச் சுவையை மட்டும் எடுத்துச் சொல்லும் நூல் அல்ல. பண்பாடு, நாகரிகம், அறம் என்பனவற்றுக்கும் மேலாக ஆன்மீகம் என தமிழர்க்குக் கம்பன் தந்த சொத்துக்கள் மிகப்பல. அத்தகைய பெரும் புலவனைப் போற்றி விழா எடுக்கும் வடமராட்சிக் கம்பன் கழகத்தினர் போற்றுதற்குரியவர்கள். அவர்கள் பணி தொடர எமது நல்லாசிகள்.

'குருவே துணை'

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்,
குரு மகா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்;

''கல்வியிற் பெரியன் கம்பன்'', என்று நமது தமிழ்ப் பெரியோர்களாற் போற்றப்பட்ட கவிச்சக்கரவர்த்திக்கு எழுச்சி காணும் நம் ஈழத் தமிழினம் விழாவெடுக்கும் முதலுரிமையைப் பெறுகின்றது. கம்பனைப் போற்றுவதென்பது தமிழைப் போற்றுவதே. கம்பன் மதங் கடந்து நின்ற ஒரு பெரும் புலவன். ''ஒரு கன்னத்திலடித்தால் மறுகன்னத்தைக் காட்டு'' என்ற இயேசுநாதரின் அருள் வாக்கியத்தை, தனக்குப் பெருந் தீங்கு செய்த இராவணன் வெறுங்கையேடு நிற்கவும் அவனை மன்னித்து அருள் செய்யும் இராமனின் உயர் குணத்தின் மூலம் கம்பன் காட்டுகின்றான். அத்தகைய பெரும் புலவனுக்கு விழாவெடுக்கும் வடமராட்சிக் கம்பன் கழகத்தின் முயற்சி வெல்ல ஆசீர்வதிக்கிறேன்.

அருட்திரு. பிரான்ஸிஸ் யோசப் அடிகளார்,

## அன்னையின் வாழ்த்து!

அருமையும் எளிமையும் கவிதை நயமும் சந்த இசையும் இலக்கிய ஆழமும் கொண்டது கம்பராமாயணம். நகரங்கள் தோறும் கிராமங்கள் தோறும் கம்பனுக்கு விழா எடுப்பதன் மூலம் இக்காவியத்தை மக்கள் மத்தியில் சுவைக்கவும் உணரவும் வைப்பது வரவேற்கத்தக்கது. வடமராட்சிக் கம்பன்கழகத்தினர் நடத்தும் கம்பன் விழா, பயன்தரு பெருவிழாவாக அமைய இருப்பது பாராட்டிற்குரியது. விழாவையும், விழா அமைப்பாளர்களையும் உள நிறைவோடு வாழ்த்துகிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை

## அறிஞர் வாழ்த்து!

'கம்பனும் கம்பராமாயணமும் வாழும் வரையும் தமிழ் வாழும்' என்றான் பாரதி. ஈழத் தமிழர்கள் தம் வாழ்வுரிமைக்காக எல்லையில்லா இன்னல்களையனுபவித்து வரும் இவ் வேளையில் கம்பன் விழா வாடும் தமிழர்களை எழுச்சி கொள்ள வைக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழறிஞர்களுக்கு இலக்கியமாகவும், சான்றோர்க்கு அறநூலாகவும், பக்தர்களுக்கு ஆன்மீகநூலாகவும், மாணவர்களிற்குக் கல்வி நூலாகவும் பாமரர்களுக்கு வாழ்வியல் நூலாகவும் கம்பகாவியம் பல வர்ணம் காட்டி அற்புதம் செய்யும். அத்தகைய கவிச்சக்கரவர்த்திக்கு வடமராட்சிக் கம்பன் கழகம் விழாவெடுப்பது பற்றி துணைவேந்தர் என்ற முறையிலும், வடமராட்சியைச் சார்ந்தவன் என்ற முறையிலும் பெரு மகிழ்வு எய்துகின்றேன். அவர்கள் பணி வளர வாழ்த்துகின்றேன்;

துணைவேந்தர் அ. துரைராசா

## விழாவில் பங்கேற்கும் அறிஞர்கள், கலைஞர்கள்.

விழாவில் பங்கு கொள்வோர்

இலக்கண வித்தகர். இ. நமசிவாயதேசிகர், பேராசிரியர் அ. துரைராசா,
திரு. க. சிவராமலிங்கம் B. A., திரு. க. சொக்கலிங்கம் M. A.,
பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. இ. ஜெயராஜ், திரு. காரை. சுந்தரம்பிள்ளை Ph.D,
திரு. இ. முருகையன் B. A. B. Sc, திரு. சோ. பத்மநாதன் B. A.
திரு. நா. சுப்பிரமணிய ஐயர் Ph.D., திரு. ப. கோபாலகிருஷ்ணன் Ph. D.,
திரு. வா. சோமசுந்தரம் S L.E.A.S., கவிஞர் மன்னவன் கந்தப்பு,
திருமதி மனோன்மணி சண்முகதாஸ், M. A., கலாவினோதன் சின்னமணி,
வைத்திய கலாநிதி க. முருகானந்தம், திரு. சுந்தரம் டிவகலாலா,
திரு. க. நாகேஸ்வரன் M. A., திரு. எஸ். ஸ்ரீதயாளன் B. A.,
கவிஞர் கல்வயல் வே. குமாரசுவாமி, கவிஞர் நாவண்ணன்,
திரு. அநு. வை. நாகராசன், திரு. வி. நடராசா M.A. திரு. கோ. சி. வேலாயுதம்,
வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் செல்வம், திரு. தி. திருநந்தகுமார்,
திரு. க. குமாரதாசன், திரு. இரா. செல்வவடிவேல், திரு. த. சிவகுமாரன்,
திரு. ஜெ. வி. ஜெயசீலன், திரு. ஆறு. திருமுருகன் B.A., திரு. த. சிவசங்கர்,
திரு. க. யோகநாதன், திரு. ஸ்ரீ. பிரசாந்தன், திரு. ச. மணிமாறன்,
திரு. த. நாகேஸ்வரன், செல்வி அருந்ததி, செல்வி சாந்தினி,
செல்வி த. குமுதினி, திரு. ச. முகுந்தன், திரு. கதிர்காமசேகரன்,
திரு. தேவதாசன், திரு. வி. சிற்றம்பலம், திரு. செல்லமுத்து ஸ்ரீநிவாசன்,
திரு. ஆ. சிவநாதன், திரு. ஸ்ரீதரன், திரு. த. ஜெயசீலன்,
நாதஸ்வர வித்துவான் K. R. சுந்தரமூர்த்தி குழுவினர், T. உதயசங்கர் குழுவினர்
M. பஞ்சாபிகேசன் P. நாகேந்திரம் குழுவினர், N. R. K. இரத்தினகுமார்,
N. R. K. வாகீஸ்வரன் குழுவினர், சிவரத்தினம் குழுவினர்,
ஜெகநாதன் குழுவினர், சங்கீத பூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர்,
சங்கீத பூஷணம் S. குமாரசுவாமி, திரு. வர்ண இராமேஸ்வரன்,
செல்வி பரமேஸ்வரி கணேசன், வைத்திய கலாநிதி. ஸ்ரீரட்ணகுமார்.

## தம் அகம் நிறைந்த சான்றோர் தகை வாழ்த்து!

தமிழுக்குக் 'கதி' கம்பனும் திருவள்ளுவனும் தான் எங்கு முட்டு ஏற்படுகின்றதோ அங்கு இவர்களில் ஒருவர் கை தரவல்லவர்களாக அமைந்திருக்கின்றார்கள். இது என் சொந்த அனுபவம்.

கம்பனுக்கு விழா என்றால் அது தமிழ் விழாவே விழா எடுக்கும் வடமராட்சிக் கம்பன் கழகத்தினர் போற்றுதலுக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள்.

வாழ்க கம்பன்! வளர்க தமிழ்!

க. சிவராமலிங்கம்
போஷகர்,
அகில இலங்கைக் கம்பன் கழகம்.

வாழ்வுக்கு மூலமாவது அறம். வேதம் கூட அறநூல் என்று சொல்லப்படலாம். உலகப் பெருநூலாகிய திருக்குறளும் ஒரு அறநூலே. பிற்காலத்தில் திருக்குறளே பேரறநூலாகக் கருதப்படுகின்றது. திருக்குறளின் பின் வந்த தமிழ் நூலெல்லாம், அந்நூலின் கண்ணே விதை பெற்று விளைவு செய்துள்ளன. கம்பநாட்டாழ்வாரும் அங்ஙனமே. கம்பன் திருக்குறள் கற்றவர் என்பதை கம்பராமாயணத்தைக் கற்றவர்கள் கண்டறிவர். ''கல்வியிற் பெரியன் கம்பன்'' என்பது ஆன்றோர் வாக்கு. வடமராட்சிக் கம்பன் கழகத்தார் கம்பனுக்கு விழாவெடுத்துத் தமிழ் வளர்க்க எடுக்கும் முயற்சி காலத்தினாற் செய்த நன்றியாகக் கருதப்படும் அவ்விழா சிறப்புறுக.

இலக்கணவித்தகர்:
இ. நமசிவாயதேசிகர்

உலக இலக்கிய அவையிலே எவ்விதத் தயக்கமும் இல்லாமல் தமிழர்கள் புகுவதற்கு வழிவகுத்தவன் கம்பன். அவன் தந்த பெருங்காவியம் தமிழ் மொழியின் வளத்தை உயர்த்தியது. இத்தகைய பெரும் புலவனை ஆண்டுதோறும் நினைவு கூர்வது பயனுடையது. இவ்வுயர் பணியில் கம்பன் கழகங்கள் ஈடுபட்டு வருவது பாராட்டிற்குரியது. வடமராட்சிக் கம்பன் கழகம் எடுக்கும் விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்;



கம்பனுக்குத் தொண்டு கடவுளுக்குச் சேவை

## தாய் வாழ்த்து!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நாம் தொடங்கிய கம்பன் பணி இன்று ஊர்தோறும் பல்கிப் பெருகுவது கண்டு பெரு மகிழ்வு எய்துகின்றோம். வடமராட்சி, புலமைப் பாரம்பரியம் கொண்ட ஒரு ஊர் சதாவதானி கதிரவேற்பிள்ளை, பேராசான் கந்த முருகேசனார் போன்ற பெருந் தமிழறிஞர்கள் வாழ்ந்த ஊர். அவ்வழியில் இன்றும் தொடரும் வடமராட்சித் தமிழன்பர்கள் கம்பனுக்கு விழாவெடுப்பது ஆச்சரியந் தரும் செய்தியல்ல. அவர்கள் பணி நின்று நிலைக்க தாய்க் கழகத்தின் சார்பில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.
கம்பன் வாழ்க! கம்பன் புகழ் வாழ்க!

கன்னித் தமிழ் வாழ்க!
இ ஜெயராஜ்
அமைப்பாளர்,
அகில இலங்கை கம்பன் கழகம்.

## கம்பன் விழா

தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றல், நெல்லியடி.
1994 மார்ச் 04, 05, 06 வெள்ளி, சனி, ஞாயிறு, காலை, மாலை

நிகழ்ச்சிகள்:

பட்டி மண்டபம்
சுழலும் சொற்போர்
விவாத அரங்கு
கோல உரையாடல்
ஐயந்தெளி அரங்கு
கவியரங்கம்
வழக்காடு மன்றம்

## தலைமை வாழ்த்து!

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் வடமராட்சிக் கிளையினர் நடத்துகின்ற கம்பன் விழா சீராகவும், சிறப்பாகவும் நடைபெற எமது வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். காலத்தின் தேவையை உணர்ந்து கம்பன் கவியூற்றில் நீராடி தமிழிற்கும், தாய் நிலத்திற்கும் இவ்விழா அணி சேர்க்கும் என நம்புகின்றோம். போராட்டத்திற்கு மத்தியிலும் எம்மண் சோர்ந்து துவண்டு போய்விடாது நிமிர்ந்து நிற்பதற்கு இம்மாதிரியான விழாக்கள் வலுச்சேர்க்கும் என்பது எம் அசையாத நம்பிக்கை. வெல்லும் எம் தாயகத்தில் கலை, இலக்கியங்கள் தலை நிமிரும். அதற்கான கால்கோள் விழாவாக இக்கம்பன் விழா சிறப்புறட்டும். என்றும் நல்லன பக்கம் நாமிருப்போம். அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பணி சிறக்கவும், வடமராட்சிக் கிளையின் இவ்விழா வெற்றிபெறவும் எமது வாழ்த்துக்கள்.

புதுவை இரத்தினதுரை,
பொறுப்பாளர்,
கலை, பண்பாட்டுக் கழகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.



கம்பனுக்குத் தொண்டு கடவுளுக்குச் சேவை

### வடமராட்சிக் கம்பன் கழகத்தினரின் கம்பன் விழா சிறப்புற வாழ்த்துவோர்

ஐ. சிவநாதன்
வ. தவராசா
த. தங்கேஸ்வரன்
ச. தங்கராசா
மு. இராஜகோபால்
ச. சண்முகசுந்தரம்
நா. தெய்வேந்திரம்
செ. ஜெகசோதி
ஐ. இராசேஸ்வரன்
அ. ஜெகநாதன்
க. [illegible]
இ. [illegible]
அ. நாகரத்தினம்
க. பாலச்சந்திரன்
[illegible]
பொ. [illegible]
சி. க. நாகராசா
கட்டைவேலி, நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கம்
பிள்ளையார் அரிசி ஆலை
சுதர்ஸனம்
நெல்லியடி சனசமூக நிலையம்
கலைமகள் சவுண்ஸ்
கமலா அரிசி ஆலை
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்
நடா லைற் வேக்ஸ்
நெல்லியடி வர்த்தகர்கள்
சுபாஸ் பேக்கரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய

## திருமஞ்ச வெள்ளோட்ட விழாச் சிறப்பிதழ்

## அடியாருக்கு அருள்பாலிக்கும் ஞான மயமான விநாயகன்

### வை. அநவரதவிநாயகமூர்த்தி

சைவமும், தமிழும் வளர்த்த சான்றோர்கள் பலர் வாழ்ந்த புண்ணிய பூமியாகத் திகழ்வது நமது திருநெல்வேலி கிராமமாகும். சங்கீதம், நாட்டியம், நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய நுண்கலைகளின் இருப்பிடமாக இக்கிராமம் தொன்று தொட்டு விளங்கி வருகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருநெல்வேலியில், இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் சூழலிலே விநாயகப் பெருமானை மூல மூர்த்தியாகக் கொண்ட இவ்வாலயம் கிழக்குப் பக்கம் நோக்கிய சந்நிதியுடன் அமைந்துள்ளது. சிறிய கோயிலாக இருக்கின்ற போதிலும் அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமான் மூர்த்திகரமாக விளங்குகிறார்.

பிரணவ சொரூபியான விநாயகப் பெருமானின் அருள் வடிவங்கள் நமது ஆலயங்களில் நின்ற கோலத்திலும், இருந்த கோலத்திலும், நடனத் திருக்கோலத்திலும் உள்ளன.

**இருந்த கோலத்தில் காட்சி தரும் விநாயகர்**

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்திலே ஏத்துவார் இடர்களையும் எம்பெருமான் இருந்த கோலத்திலே காட்சி தருகிறார். ஒற்றைக் கொம்பும், இரு செவிகளும், மூன்று திருக்கண்களும், நான்கு திருத்தோள்கள், ஐந்து திருக்கரங்களும் பருத்த உடம்பும் உடையவராக "வீரகத்தி விநாயகன்" என்னும் திருநாமம் தாங்கி தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருள் பாலித்த வண்ணம் வீற்றிருக்கிறார். அவருடைய முகம் பிரணவத்தையும் மூன்று திருக்கண்கள் முச்சுடரையும் உணர்த்துகின்றன. அவருடைய துதிக்கை நாத விந்து வடிவமாக அமைந்திருக்கிறது. அவரது திருமேனி ஞான மயமானது. இவரின் திருப்பாதங்கள் ஞான சக்தியும் இரியா சக்தியுமாகும்.

விநாயகப் பெருமான் தமது திருக்கரங்களில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம், கும்பம் என்பன தாங்கியுள்ளார். விநாயகப் பெருமானது ஐந்து திருக்கரங்களும் பஞ்ச கிருத்தியங்கள் என்னும் ஐந்தொழில்களையும் குறித்து நிற்கின்றன.

**இன்னருள் புரியும் கருணைக் கடல்**

ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் தம்மை உள்ளன்புடன் வழிபடும் அடியார்களுக்கு எளிதில் இன்னருள் புரியும் கருணைக் கடல். அவர்களது துன்பங்களை நீக்குவதில் வல்லவர். அதிதுடன் கல்வி, செல்வம், ஞானம், சகல கலைகள் ஆகியவற்றையும் வாரி வழங்குவார்.

"நற்குஞ் சரக்கன்று
நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

என்று உமாபதி சிவாசாரியாரது அருள்வாக்கும் இங்கு கவனிக்கத்தக்கது.

இவ்வாலயம் உள்வீதி, வெளிவீதி என இரு வீதிகளைக் கொண்டதாக விளங்குகின்றது. வீதிகள் யாவும் தூய்மையாக இருக்கின்றன. இவ்வீதிகள் விநாயகப் பெருமான் திருவுலா வருவதற்கும் பக்தர்கள் வீதிவலம் வந்து வழிபாடு செய்வதற்குமாகப் பயன்படுகின்றன. ஆலயத்தின் சுற்றாடல்கள் தூய்மையாகவும் தெய்வமணம் கமழ்பவையாகவும் விளங்குகின்றன. அத்துடன் அமைதியும், ஆனந்தமும் தவழ்ந்துவந்து மனநிறைவை ஏற்படுத்தும்.

ஆலயத்தின் தெற்கு வாசலை நோக்கியபடி உற்சவமூர்த்திகளான விநாயகர், பஞ்சமுக விநாயகர், வலம்புரி விநாயகர் ஆகியோர் தேவசபையில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். வைரவப் பெருமானுக்கு தனியே கோயில் உண்டு கோயிலையும் கிராமத்தையும் பாதுகாக்கும் காவற்தெய்வமாக விளங்கும் வைரவப் பெருமானை க்ஷேத்திர பாலகர் என்றும் அழைப்பர். வைரவப் பெருமான் வீற்றிருக்கும் சிறு ஆலயத்துக்கு தெற்குப் பக்கமாக அருகில் மணிக்கூட்டு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. வசந்த மண்டபம் அழகாக அமைந்துள்ளது. யாகசாலை, வாகனசாலை, மடப்பள்ளி, களஞ்சிய அறை யாவும் அமையப்பெற்று ஆலயம் சிறந்து விளங்குகிறது.

இவ்வாலயத்திலும் ஆண்டு தோறும் மாசி மாதத்தில் வரும் அமாவாசைத் தினத்தன்று பதினாறாம் விழாவான தீர்த்தோற்சவம் நடைபெறத்தக்கதாக, கொடியேற்றவிழாவுடன் மஹோற்சவம் ஆரம்பித்து தொடர்ந்து 14 நாட்களுக்கு விழா விமரிசையாக நடைபெற்று 15ஆம் நாள் இரதோற்சவமும் அதனையடுத்து 16ஆம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். இந்த மஹோற்சவ காலத்தில் வீரகத்தி விநாயகனது தரிசனம் பெற திருநெல்வேலியிலும் அயல் கிராமங்களிலிருந்தும் அடியார்கள் ஆயிரக்கணக்கில் வந்தவண்ணம் இருப்பார்கள்.

★




**மஞ்ச வெள்ளோட்டம்**

காலம்: 04 - 03 - 1994

நேரம்: நண்பகல் 12-00 மணி

மஞ்ச நிர்மாண ஸ்தபதி

ஆ. ஜீவரத்தினம் ஆச்சாரி,
ஆறுமுகம் சிற்பாலயம்,
காளிகோவிலடி,
திருநெல்வேலி.


## தும்பிக்கையோனே துணை

நம்பிக்கை வைத்தசில நற்காரியங்கட்குத்
தும்பிக்கை யோனே துணையென்னுந்—தெம்புமிக
ஐங்கரனைச் செந்தமிழி லர்ச்சனைசெய் தன்புமனப்
பங்கையத்தில் வைத்தேன் பரிந்து.

க வீ,

## ஸ்ரீ வீரகத்தி விநாயகனின் சித்திர மஞ்சம் சிறப்புற வெள்ளோட்டம் காணும் நாள்

### எஸ். சிவலிங்கராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்

இன்று பகல் பன்னிரண்டு மணிக்குச் சித்திர மஞ்ச வெள்ளோட்ட விழா நடைபெறுகின்றது. விநாயகர் வழிபாட்டு மரபிலே வீரகத்தி விநாயகர் என அழைப்பது வழக்காறாகவுள்ளது. வீர+சக்தி+ விநாயகர் என்பதே வீரகத்தி விநாயகர் என மாற்றம் என அறிஞர்கள் கூறுவர். திருநெல்வேலியிலே வீரகத்தி விநாயகரின் அருளாட்சி செழிப்புறுகின்றது.

திருநெல்வேலி மண்ணுக்குரிய "வளம்" போல அந்த மண்ணில் வாழுகின்ற மக்களின் மனமும் "வளம்" பொருந்தியது.

"பசுவதைக்கு அஞ்சிப் பரதேசம் போன" சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்த, கூழங்கைத் தம்பிரான் என அழைக்கப்பட்ட கனகசபாபதி யோகி சமாதிவைக்கப்பட்ட, பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்கள் வாழ்ந்து மறைந்த மண் திருநெல்வேலி மண். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றோடு பின்னிப் பிணைந்துபோன முற்குறிப்பிட்ட மூவரும் ஸ்ரீ வீரகத்தி விநாயகராலயச் சூழலையண்டியவர்களே.

ஸ்ரீவீரகத்தி விநாயகருக்குத் திருமஞ்சம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. நாற்றுக்கு மேற்பட்ட சித்திரத் தேர்களை நிர்மாணித்த சிற்பச்சக்கரவர்த்தி ஆ. ஜீவரத்தினம் ஆச்சாரியார் இச்சித்திரமஞ்சத்தை நிர்மாணித்துள்ளார். கலை வண்ணம் மிக்க சித்திர மஞ்ச வெள்ளோட்டம் இன்று அமைதியான முறையில் நிகழுகின்றது.

கலைசார் முயற்சிகளிலே வெள்ளோட்ட விழா மிகவும் முக்கியமானது. வெள்ளோட்டம், வெள்உடுப்பு, வெள்ச்சோறு முதலிய சொற்கள் முன்னரே செய்து பார்த்தல் என்ற பொருளிலேயே நிலவுகின்றன. நிகழ்வுக்கு முந்திய "ஒத்திகை" என்று கூட இதனைச் சொல்லலாம். கைவருந்தி உழைத்த கலைஞர்களைக் கௌரவித்தல் என்பது மாத்திரமல்ல "கடவுளுக்கு முதல் கலைஞன்" எனும் ஒரு உள்ளுறையும் வெள்ளோட்ட விழாவில் கலந்திருப்பதை அவதானிக்கலாம்.

சித்திரமஞ்சம் எமது பண்பாட்டிற்குப் புதியதல்ல. ஆலயம், அரண்மனை இரண்டிலும் சிறப்பாக மஞ்சம் பயன்பட்டு, மஞ்சம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மஞ்சம் என்னும் சொல்லுக்குக் கட்டில், திண்ணை, மேடை, வேதிகை ஆசனமிடுதற்குரிய பீடம், சப்பரம் முதலிய பல பொருள்கள் உண்டு. ஆலயத்திலே நிர்மாணிக்கப்படும் மஞ்சம் ஏதோ ஒருவகையில் எல்லாப் பொருளையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது.

"சீரும் செம்மையும்-
ஒப்பவல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலைச்"

சிற்பங்களைப் பற்றி நெடுநல்வாடையிலே நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். அந்தப்புரத்து அழகிய சிற்பங்களைக் குறிப்பிட்ட இலக்கியங்கள் "கூருளிக் குயின்றவல்லோனின்" வாழ்வுபற்றிய செய்திகளைத் தரவில்லை.

வெள்ளோட்டம், வேளைக்கு, "வெள்ளண" முதன் முதலாக ஓடவிட்டுப் பரிசீலனை செய்வது என்ற பொருளிலும் வழங்கியிருக்கலாம் போலத்தோன்றுகின்றது. அதை ஆக்கிய கலைஞன் அதனைச் செலுத்திக் காட்டுவது என்ற அர்த்தமும் அதனுள் புதைந்துகிடக்கின்றது.

இம்மஞ்சத்தைத் தன் நெஞ்சத்தில் இருத்தி நிர்மாணித்த ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ஜீவரத்தினம் ஆச்சாரியார் அவர்கள் ஓர் நல்ல கலைஞன் உயர்ந்த மானுடம் பேணும் மாண்பினர். தனது கலையைக், கலை முயற்சிகளைத் தெய்வீகப் பணியாகவே கருதுபவர். ஸ்ரீவீரகத்தி விநாயகனின் மெய்யடியார்களில் ஒருவர். தமது கலைப்பணிகளுக்குக் "கணக்கு"ப் பாராத ஓர் அற்புதமான கலைஞர். அவரின் தலைமையின் கீழ் ஆறுமுகம் சிறபாலயத்தினர் இச் சித்திர மஞ்சத்தை அழகுற நிர்மாணித்துள்ளனர்.

வெள்ளோட்டம் நிகழும் இந்நாளிலே உயர்திரு ஜீவரத்தினம் ஸ்தபதியும் அவரது கலைக்குடும்பமும் எல்லா நலனும் பெற்று வாழப் பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டுவோமாக.

★

## உய்வு தரும் பிரணவ சொரூபி

சைவ செம்மனச் செல்வர்களே!

பழம் கிணற்றடி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு மஞ்சம் அமைத்து வெள்ளோட்ட விழா நிகழ விருப்பதறிந்து பேருவகை எய்துகிறோம்.

பிரணவ சொரூபியாம் விநாயகப் பெருமானுக்கு நாமாற்றும் கைங்கரியங்களெல்லாம் அதிஉயர் ஸ்தானம் வகிப்பன. கருணாமூர்த்தியான அவர் எமது பிழைகளை எல்லாம் பொறுத்துத் திருவருள் பாலித்து உய்வடையச் செய்தருளுவார். திரிகரண சுத்தியோடு அவர் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டால் போதும். இது அனுபவத்தில் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை.

இவ்வழகிய மஞ்சத்தை உருவாக்கிய ஸ்தபதியார் ஸ்ரீ ஜீவரத்தினம் அவர்களின் கைவண்ணத்தை யாம் நன்கு அறிவோம். இவ்விழா செவ்வனே நிறைவுறப் பல வழியாலும் தொண்டுகள் புரிந்து, நிதி உதவி செய்த அன்பர்களைப் பாராட்டுகிறோம்.

விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி இவ்விழாவில் பங்கு கொள்ளும் அன்பர்கள் அனைவரையும் மனமார ஆசீர்வதிக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்
முதல்வர், திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.

## திருவருள் எங்கும் பரவுக

திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு விநாயகப் பெருமானுக்கு திருமஞ்சம் அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்டம் நடைபெற எம்பெருமான் அருள்பாலித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இந்த அரும்பணிக்கு உதவிய எல்லா அன்பர்களையும் பாராட்டுகின்றேன்.

எம் பெருமானின் ஆலயம் கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு வழிகளிலும் முன்னேறி வருவதற்கு ஆலய தர்மகர்த்தா சபையும் ஆலய அர்ச்சகர்களும், விநாயகப் பெருமானின் அடியார்களும் காரணமாக இருக்கின்றனர். ஆலயம் மேலும் வளர்ந்து விநாயகப் பெருமானின் திருவருள் எங்கும் பரவி நம் எல்லோரது துன்பங்களையும் அகற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

ஆ. மகாலிங்கம்
பிரதேச செயலாளர் / மேலதிக
அரசாங்க அதிபர், உடுவில்

## அற்புத மஞ்சம்

பழங்கிணற் றடியிற் பிள்ளையார் இவர்ந்து
பவனிவந் தருள்கையில் பார்த்தெம்
உளங்களித் திடுமாறு அற்புத மஞ்சம்
ஒன்றுரு வாக்கிய கலைஞன்,
புழங்குதற் கினிய பிறவிநல் லறங்கள்,
வளர்க்குமோர் புண்ணிய வாளன்
வழங்குதற் கென்றும் செதுக்குதற் கென்றும்
வாய்த்தகை இரண்டுடை வள்ளல்!

குற்றியாய்க் கிடந்த மரம் உயிர் பெற்று
குலவுபேர் அழகுடன் உள்ளம்
பற்றவும், இரவும் பகலும் எம்மோடு
பழகவும், பேசவும் வைத்தான்
சிற்றுளி கொண்டு தேவர்தம் உலகை
மண்மிசைச் செய்திட சிற்ப
விற்பனன் ஜீவரத்தினம் வாழ
வேண்டும்பல் லாண்டென வேண்டும்—

சோ. ப

## இத்தரையில் வாழ்க இனிது

உள்ளம் உருகும் உவகை பெருக்கெடுக்கும்
வெள்ளமெனக் கண்ணீர் விரைந்துவரும் - மெள்ள
சீரடியார் கூட்டம் சிறந்த வடம்பிடித்து
ஊரதிரத் தேகிழுக்கும் போது.

கூடுமடியார்கள் குவிகரத்தை உச்சிவைக்க
ஆடும் மணியோசை அருள்தெளிக்கும் - நீடுபுகழ்
சித்திரமஞ்சத்தில் சித்திவிநாயக ரிவர்ந்து
முத்தியுலா வருமிந் நாள்;

நல்ல உவமை உருவகங்களிசேர் படிமம்
சொல்லினிமை சேர்ந்த தமிழ்க்கவிபோல்- பல்விதமாம்
சித்திரமஞ் சம்இயற்றும் ஜீவரத்தினம் ஸ்தபதி
இத்தரையில் வாழ்க இனிது.

— மறைக்காடன்

## மின்னும் விநாயகம்

பழங்கிணற்றடிப் பிள்ளை தவழ்ந்து போய்ப்
பவனிச்சிடும் புது மஞ்சத்தில் ஏறுமாம்.
தொழும்பர் போற்றுவர்; தூவுவர் சிந்துவர்
சுற்று முற்றும் திருவருள் சூழுமாம்

ஜீவரத்தினச் செய்திநலச் செஞ்சுடர்
திருநெல்வேலி முழுதும் பரவுமாம்
மேவும் அந்த வெளிச்ச எழிலிலே
வீரகத்தி விநாயகம் மின்னுமாம்.

— சித்தமழகியான்.


திருமஞ்ச வெள்ளோட்டம் சிறப்புற அருள் வேண்டுவோர்:

**தாஸ் ஸ்ரோஸ்**
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

**சீமாட்டி ஜவுளி சமுத்திரம்**
112, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**கமலேஸ்வரி களஞ்சியம்**
119/2, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

**குறிஞ்சி பாமசி**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி. திருநெல்வேலி.

**B. K. V.**
பெண்கள் ஆண்கள் குழந்தைகள் தையல் நிலையம்
சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.

**ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ் & பான்சிகுட்ஸ்**
திருநெல்வேலிச் சந்தி. திருநெல்வேலி.

**மலரும் மலர்கள்**
(வீடியோ சேவை)
82, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

**ஏசியன் புடைவை அகம்**
பலாலி வீதி. திருநெல்வேலிச் சந்தி திருநெல்வேலி.

**ராம் கரன் புத்தகசாலை**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி. திருநெல்வேலி.

**வேல் முருகன் சைவ உணவகம்**
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

**ஸ்ரீகாமாட்சி தேனீர்க் கடை**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(விளம்பர இல: சி-7300)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சீனாவின் நோக்கம்

ஸ்ரீலங்காவில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்துக்கு சர்வதேச மத்தியஸ்தம் தேவையில்லை. சர்வதேச மத்தியஸ்தம் இன்றியே இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும்.

இவ்வாறு கொழும்பு வந்திருந்த சீனாவின் உதவிப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான இயாங் சிங் சென் கூறிச் சென்றிருக்கிறார்.

எந்த உள்நாட்டுப் பிரச்சினையும் அந்தந்த நாட்டிற்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும். வெளியார் தலையீடோ மத்தியஸ்தமோ விரும்பத்தக்கதல்ல என்பது பொதுவான நிலைப்பாடு

ஆனால் உள்நாட்டுப் பிரச்சினை யுத்தமாக மாற்றப்பட்டு, குறிப்பிட்ட மக்கள் மீது திணிக்கப்பட்டு, அவர்கள் கொன்று குவிக்கப்படும் போதும்—

சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கம் அக்கறைகொள்ளாமலும், பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதத்தில் நியாயமான தீர்வைக் காண்பதில் விருப்பம் இல்லாமலும், அடக்குமுறைப நிலை நாட்டும் விதத்தில் தனக்குச் சாதகமான தீர்வை திணிக்க முயலும் போதும்—

பாதிப்புறும் மக்களின் அவலங்கள் முடிவின்றி காலவரையறையே இல்லாது நீண்டு கொண்டு செல்லும் போதும்—

ஏனைய நாடுகள் மத்தியஸ்தம் செய்து தீர்வுக்கு உதவாமல் இருக்க வேண்டும் என்பது ஏற்புடைத்தல்ல.

பாதிக்கப்பட்டவனுக்கு நியாயம் கிடைக்க வேண்டும், அதற்காக நல்லெண்ணத்துடனும் மனிதாபிமானத்துடனும் உதவ வேண்டும் என்ற நற்சிந்தனையுடன் செயற்படுவதே மத்தியஸ்தம். ஆனால் தனது சொந்த நலன் கருதி பாதிக்கப்பட்டவர்கள் மீது "குதிரை விடும்" போக்கில், அக்கிரமம் செய்யும் தரப்புக்குத் துணை போகும் விதத்தில், வெளிநாட்டார் செயற்படுவது தலையீடு.

இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாதவர் போல, சீன உதவிப் பிரதமர் சர்வதேச மத்தியஸ்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது கொழும்பு அரசுக்குத் துணை போவதேயாகும்.

சர்வதேச மத்தியஸ்தம் ஆகாது என்று கூறிய அவர், ஸ்ரீலங்காவுக்குக் குறைந்த விலையில் ஆயுதங்களை விற்பது குறித்துப் பேச்சுக்கள் நடத்தியிருப்பதால் சீனா எங்கே நிற்கிறது என்பதனை "சுட்டிப்பாக"க் காட்டிவிட்டார்.

உள்நாட்டுப் போர் தொடர வேண்டும். அவ்வாறு தொடர்ந்தால் தான் தனக்கு ஆயுத விற்பனை நடக்கும். ஆகையால் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய சர்வதேச மத்தியஸ்தம் வேண்டாம் என்று சீன உதவிப் பிரதமர் வற்புறுத்துகிறார்.

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியின் பின்னர் சீனா அமெரிக்காவுடன் போட்டி போடும் ஒரு வல்லரசாக மாற வேண்டும் என்ற இலக்குடன் செயற்படுகிறது. அதற்கேற்ற வகையில் தனது பொருளாதார நிலையை மேம்படுத்தியும் வருகிறது. சீனாவின் தேசிய நிகர உற்பத்தி துரிதமாக வளர்ந்து வருகிறது. அதற்குப் பக்கபலமாக ஆயுத உற்பத்தி—விற்பனையில் அது அதிக அக்கறை காட்டுகிறது.

சோவியத்தில் அங்கம் வகித்த நாடுகளிடம் இருந்து பழைய ஆயுதங்களை வாங்கி விற்பதனை, சீனா முக்கிய வர்த்தகமாக்கி உள்ளது. "சோஷலிச சந்தைப் பொருளாதாரம்" என்ற ஒரு வகைத் திறந்த பொருளாதார திட்டத்தின் கீழ் அது தனது வர்த்தக நலனை விஸ்தரித்து வருகிறது.

அதனாலேயே, சிங்களத்துக்கு ஆயுத விற்பனை செய்வதற்காக இனப்பிரச்சினைக்கு சர்வதேச மத்தியஸ்தம் வேண்டாம் என்று சீனா கூக்குரல் போடுகிறது. அவரவருக்கு தமது சுயநலனை விட வேறு ஏது அக்கறை?

### கலந்துரையாடல்

இலங்கைச் சிமெந்துக் கூட்டுத்தாபன காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் தற்கால நிலைமைபற்றி ஆராயும் பொருட்டு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நாளை காலை 9.00 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளது. (ஈ)

### 12 ஆவது ஆண்டு நிறைவு விழா

செவிப்புலன் வலுவற்றோர் புனர் வாழ்வு நிறுவனத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனி காலை 8.30மணிக்கு யாழ் கே. கே. எஸ். வீதியிலுள்ள இல்லர் மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி இ. பத்தினியம்மா கலந்து கொள்வார்.

# இஸ்ரேல்-அரபு பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி!

வாஷிங்டன், மார். 4

பலஸ்தீன விடுதலை இயக்கம் இடைநிறுத்திவைத்துள்ள மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஜனாதிபதி பில் கிளின்ரன் முக்கிய நாடுகளின் அரசுத்தலைவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் உள்ள ஹெப்ரோன் நகர பள்ளிவாசலில் யூத குடியிருப்பாளர் ஒருவரால் 40க்கு அதிகமான பலஸ்தீனியர்கள் சுட்டுக்கொல்லப் பட்டதை அடுத்து இஸ்ரேலுடனான பேச்சுகளை பலஸ்தீன விடுதலை இயக்கம் இடைநிறுத்தி வைத்து இருப்பதும்—

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களான காஸா மற்றும் மேற்குக் கரைகளில் வாழும் பலஸ்தீனியரின் பாதுகாப்பைச் சர்வதேச சமூகம் உறுதிப்படுத்தும் வரைதாம் சமாதானப்பேச்சுகளில் கலந்து கொள்ளப்போவதில்லைஎன்று பலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்துள்ளதும் தெரிந்தவையே—

ஹெப்ரோன் படுகொலையைக் கண்டித்து பலஸ்தீனியர்கள் தொடர்ந்து ஆர்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேல் ராணுவம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நேற்று சுட்டதில் மேலும் இரண்டு பலஸ்தீனியர்கள் கொல்லப் பட்டனர்.

இதேவேளை — இஸ்ரேல் அரசாங்கம் மேலும் 400 பலஸ்தீனக்கைதிகளை நேற்று விடுவித்தது. கடந்த செவ்வாய்க்கிழமை 500 பலஸ்தீனியர்களை இஸ்ரேல் அரசு விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது.

ஹெப்ரோன் படுகொலைச் சம்பவத்தை அடுத்து ஆத்திரமடைந்துள்ள பலஸ்தீனியர்களையும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களையும் சாந்தப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே பலஸ்தீனியக் கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில்— ஹெப்ரோன் படுகொலைச் சம்பவத்துக்குப் பதிலடியாக இன்னொரு படுகொலையை யூதர்கள் மத்தியில் பலஸ்தீனியர் மேற்கொள்ளும் ஆபத்து இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் யிற்ஷாக் ரபீன் எச்சரித்துள்ளார். (த-எ)

# இணைப்பு பல்கலைக் கல்லூரி: விரிவுபடுத்துவதற்கு முடிவு

## மாவட்டத்திற்கு ஒன்று அமைக்கப்படும்

கொழும்பு, மார்ச் 4

உயர்கல்வித் தகைமை பெற்றுள்ள மாணவர்களுக்கு இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் வசதிகள் வழங்கும் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படவிருப்பதாக பல்கலைக்கழக அலுவல்கள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

ஆண்டு தோறும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சுமார் 50 ஆயிரம் மாணவர் பல்கலைக்கழகக் கல்விக்கு தகைமை பெறுகிறார்கள். ஆயினும் பல்கலைக்கழகங்களில் நிலவும் வசதிக்கேற்ப அவர்களில் 25 ஆயிரம் பேருக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது.

இதற்கு மாற்றீடாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் —

இதுவரை இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்படாத மாவட்டங்களில் இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரிகள் விரைவில் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ-6)

## தீர்வு குறித்து தொண்டாவுடன் பேச்சு:

# கனேடிய பிரமுகர்கள் விவரம் கேட்கிறது இலங்கை அரசு

கொழும்பு, மார்ச் 4

அமைச்சர் தொண்டமானுடன் பேச்சுக்கள் நடத்த விருப்பம் தெரிவித்துள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கனடாவிலுள்ள முக்கிய தமிழ்ப் பிரமுகர்களின் பெயர்களை ஸ்ரீலங்கா அரசு கோரியுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக கனடாவிலுள்ள ஸ்ரீலங்கா ஆதரவு தொடர்பு துறை அதிகாரி, கனேடிய சட்ட நிபுணரும் இலங்கை அகதிகள் விடயத்தில் அக்கறை உடையவருமான மார்ஷ் வோக்கர் என்பவரை கடிதம் மூலம் கேட்டுள்ளார் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது

இலங்கை இனப்பிரச்சினையை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்க்க, கனேடிய அரசின் நல்லெண்ணத்தை பயன்படுத்துவது பற்றி கலந்தாலோசிக்க கனேடிய நாடாளு மன்ற உறுப்பினர் சிலரும் கனடா வாழ் தமிழர் சிலரும் தொண்டமானின் உதவியைக் கோரியிருந்தமை தெரிந்ததே (ஒ-த)

# இந்திய முகாம்களில் பிறந்த பிள்ளைகளுக்கு பிறப்பு பதிவு

## பெற்றோருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச். 4

இந்தியாவில் அகதி முகாம்களில் பிறந்த குழந்தைகளுக்கு உடனடியாக பிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

அண்மைக் காலங்களில் தாயகம் திரும்பியவர்கள் தங்களது பிள்ளைகளின் பிறப்புப் பதிவை காலம் தாழ்த்தாது செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு பிறப்புப்பதிவை மேற்கொள்ள பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் 'என்றும் அறிவிக்கப்படுகிறது.

★ பெற்றோர் திருமணம் செய்திருப்பின் அவர்களின் திருமணச் சான்றிதழ்.

★ பிள்ளையின் இந்திய பிறப்புச் சான்றிதழ் அல்லது அங்குள்ள பொறுப்பான உத்தியோகத்தரின் சான்றிதழ்

★ தந்தையின் கடவுச்சீட்டு

★ தந்தை தாயின் பிறப்புச் சான்றிதழ்கள்.

★ இந்தியாவிலிருந்து அகதி திரும்பி வந்து இருப்பதற்கான உதவி அரச அதிபர் அல்லது பிரதேச செயரின் சான்றிதழ்.

இந்த ஆவணங்களுடன் மேலதிக மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இவ்விண்ணப்பங்கள் யாவும் இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு பிறப்புப் பதிவு மேற்கொள்ளப் பட்டதும், பிறப்புச் சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-173)

# விடுதலைக்காக போராடுவது தமிழர் அனைவரினதும் கடமை

## நூல் வெளியீட்டு விழாவில் பேராயர் அம்பலவாணர்

யாழ்ப்பாணம், மார்ச் 4

"தமிழ் மக்கள் தமது ஆத்மாவைக் காணப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்."

தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் டி. ஜே. அம்பலவாணர் இவ்வாறு கூறினார்.

பேராயர் அம்பலவாணரின் சேவைகளை கௌரவிக்கும் "எனக்குக் கொடுக்கப்பட்ட அருளின் நிமித்தமாக" For the Sake of the grace given to me) என்ற ஆங்கிலக் கட்டுரைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் பதிலுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நூல் வெளியீட்டு விழா கடந்த 28ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி பேராயர் குலேந்திரன் மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெற்றது.

பேராயர் அம்பலவாணர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் அழிவின் மத்தியில், அடக்கு முறையின் மத்தியில் ஒரு பல்கலைக் கழகத்தைக் கட்டி எழுப்பியுள்ளனர்.

இந்த மகத்தான பணியை ஒட்டி தமிழ் மக்கள் துணைவேந்தர் துரைராசாவுக்குப் பெரிதும் கடமைப் பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் தமது ஆத்மாவைக் காணப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு சிலர் தமிழ் இனத்தின் ஆத்மாவை விற்று அதிலிருந்து பெறும் இலாபத்தில் வாழ்வது மனவருத்தத்துக்குரியது" என்றார் அவர்.

துணைவேந்தர் [illegible] தலைமை உரையில்:

"பேராயர் [illegible] கிறிஸ்தவ மக்களுக்கு மாத்திரம் அல்ல, முழுத் தமிழ் மக்களுக்குமே சேவை புரியும் ஒரு மகத்தான மனிதன் ஆவார். அவர் தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராடி வருகின்றார்." என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, கம்பவாரிதி இ. ஜெயராஜ், அருட்திரு எஸ். ஜெயநேசன், விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா, எஸ். ஜெபநேசன் ஆகியோர் விழாவில் உரை நிகழ்த்தினார்கள்.

தற்போதைய பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல், அருட்திரு. டி. எஸ். தியாகராஜா ஆகியோர் நூலின் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்கள்.

துணைவேந்தர் துரைராசா [illegible] தார்.

[illegible] நன்றியுரை கூறினார். (ஈ)

# வடமராட்சி கம்பன் விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

வடமராட்சிக் கம்பன் கழகத்தினர் நடத்தும் கம்பன் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றிலில் ஆரம்பமாகும்.

துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சியில் திரு. க. சிவராமலிங்கம், திரு. க. சொக்கலிங்கம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. செ. சீனிவாசன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

வைத்தியகலாநிதி திரு. மு. க. முருகானந்தன் தொடக்கவுரையும், வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. செல்வம் சிறப்புரையும் நிகழ்த்துவார்கள்.

"கூர்த்த நுண்ணறிவு மிக்க பாத்திரம் அனுமனே / தாரையே / விபீடணனே" என்ற தலைப்பிலான பட்டி மண்டபம் இன்று இடம் பெறும். திரு. இ. ஜெயராஜ் பட்டிமண்டபத்தின் நடுவராக விளங்குவார். (ஈ)

### உடற் பயிற்சி போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 4

வேலணை— ஊர்காவற்றுறை கோட்ட மட்டத்திலான உடற் பயிற்சிப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் நல்லூர்ப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் பிரதம விருந்தினராகவும். திவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செம்மணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பர். (ஒ)

### ஆலயங்களில்

தென் மட்டுவில் வேரற்கேணி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் வாராந்த சிறப்பு நற்சிந்தனைகள் இன்று வெள்ளி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (த-30)

### பாடசாலைகளில்

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி ச. ஜெயராஜா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கலந்து கொள்வார். (த)

★ ★ ★

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் திரு வி. கணேசராசா தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெறும். (ஒ-155)

### விளையாட்டு நிகழ்வுகள்

பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டித் தொடரில் இவ்வார இறுதியில் இடம்பெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ ஸ்கந்தா எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி — ஸ்கந்தா மைதானத்தில் நாளை காலை 8-30 மணி முதல்.

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி — மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2-30 மணி முதல், நாளை காலை 8-30 மணி முதல்.

★ யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் எதிர் யாழ். சென். பற்றிக்ஸ் — சென். ஜோன்ஸ் மைதானத்தில் இன்று பிற்பகல் 2 30 மணி முதல், நாளை காலை 8-30 மணி முதல். (உ-20-161)

### கூட்டுறவு பயிற்சி நெறி

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சி நெறிக்கு இவ்வாண்டு புதிதாக மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு ஜி. சி. ஈ. சாதாரண தரத்தி கணிதம் அல்லது வர்த்தகமும் கணக்கியலும் திறமைச்சித்தி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்களும்- கூட்டுறவுப் பணியாளர்கள் ஜி. சி ஈ. சாதாரண தரத்துடனும் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டு கழகங்கள் கலந்துரையாடல்

தென்மராட்சிப் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு தென்மராட்சி பிரிவிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது.

# கிளிநொச்சிப் பகுதியில் தரிசுக் காணி விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நிலமற்ற விவசாயிகளையும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தும் நோக்குடன் கிளிநொச்சிக் கோட்ட தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியால் தரிசுக்காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் அண்மையில் 8 பயனாளிகளுக்கு காத்தான் நகர், திருமுறிகண்டி, செல்வபுரம் ஆகிய இடங்களிலே மொத்தம் 3½ ஏக்கர் நிலம் விநியோகிக்கப் பட்டுள்ளது.

இந்த காணி விநியோகத்தினால் பயனாளிகள் தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திகொள்ள வாய்ப்பேற்பட்டுள்ளதோடு, செய்கைக்கு உட்படுத்தப்படாமலிருந்த நிலப்பரப்புக்கள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படுவதனால் வளங்களின் பயன்பாடு அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இதுவரையில் சுமார் 120 ஏக்கர் தரிசுநிலம் பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# லண்டன் இந்து நிறுவனம் அநாதை சிறுவருக்கு உதவும்

குடாநாட்டில் உள்ள அநாதைச் சிறுவர்களுக்கு உதவுவதற்கு லண்டனில் இயங்கும் இந்து நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

யாழ் அரசாங்க அதிபருக்கு இந்த நிறுவனம் இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது

அநாதைச் சிறுவர்களுக்கு உதவுவதற்கு தமது அமைப்பு விருப்பம் கொண்டுள்ளதாகவும், இதற்கென மூவாயிரம் ஸ்ரேலிங் பவுணை ஒதுக்கியிருப்பதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் அரச அதிபர் யாழ். மாவட்டத்தில் இருக்கும் அநாதைச் சிறுவர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர்களைக் கேட்டுள்ளார். (ஒ-17)

# தொண்டர் நிறுவனங்களின் கவனிப்பில் 9,000 குடும்பம்

தற்போது யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பராமரிப்பில் மட்டும், 163 இடம் பெயர்ந்தோர் முகாம்களில் 9 ஆயிரத்து 790 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 570 பேர் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 34 முகாம்களில் 986 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 148 பேர் தங்கியுள்ளனர்.

இம்முகாம்களை சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நெட்பானா, மக்கள் நலன் காக்கும் பிரிவு, போருட், சர்வோதயம், மெதடிஸ் திருச்சபை அறவழி போராட்டக்குழு, அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம், அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-1983, மனித முன்னேற்ற நடுநிலையம் போன்ற இணைய அங்கத்துவ நிறுவனங்கள் பராமரித்து வருகின்றன. (த-162)

# பொலீஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்

## திட்டத்திற்கு அரசு அங்கீகாரம்?

பொலீஸ் திணைக்களத்தில் பணிபுரியும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் அங்கீகாரமளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக 40 உதவிப் பொலீஸ் அதிபர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 120 பிரதம இன்ஸ்பெக்டர்களும் —

40 பொலீஸ் அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு 120 உதவிப்பொலீஸ் அதிபர்களும் —

12 பிரதிப்பொலீஸ்மா அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு 50 சிரேஷ்ட பொலீஸ் அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் கூறினர்.

புதிதாக 40 பிரதம இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு ஒரு தொகை இன்ஸ்பெக்டர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்பதவி உயர்வுகள் அனைத்தும் இவ்வாண்டு ஜூன் மாதத்திலுள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

சுத்தக் காற்று சுற்றிலும் நிலவிட
நித்தம் ஒரு மரம் நடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

அச்சுக்கோப்பாளர்
பயிலுநர்
ஆட்டிஸ்ற்

செல்வம் றபர் சீல் தயாரிப்பாளர்,
பெரிய மதவடி, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம். (7023)

---

உ
சுழிபுரம்

## ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் சகஸ்ர [1008] சங்காபிஷேகம்

ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமுக வருடம் மாசி மாதம் 20ஆம் நாள் இன்று (04 - 03 - 1994) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானுக்கு சகஸ்ர (1008) சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு திருக்கல்யாணமும் திருவூஞ்சலும் சுவாமி வீதி உலாவும் இடம்பெறும்.

நண்பகல் 1-00 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

### விசேட நிகழ்ச்சிகள்

மங்கள வாத்தியங்கள்

1) கோண்டாவில் நாதஸ்வர மேதைகள் கானமூர்த்தி — பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
2) நாதஸ்வர வித்துவான் P R சிவகுமார் குழுவினர்
3) வீ கண்ணன் குழுவினர்

சொற்பொழிவு

**"கந்தன் கருணை"**

திரு. சத்தியமூர்த்தி MA. அவர்கள்

வில்லுப்பாட்டு

**"வள்ளி திருமணம்"**

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழு

சங்காபிஷேகக் குழு- 1994

(29741)

---

## யாழ். விஞ்ஞான சங்கம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

மேற்படி சங்கத்தால் நடத்தப்படும்
யாழ். பல்கலைக்கழக
இராமநாதன் நுண்கலைத்துறை
அளிக்கும்

**"இசை நடன வசந்தம்"**

05-03-1994 பிற்பகல் 4 மணிக்கு
யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சி இடம்பெறாதென்பதை தயவுடன் அறியத்தருகிறோம். காலை நிகழ்ச்சிக்கு விற்பனையாகிய நுழைவுச் சீட்டுகள் மாலை நிகழ்ச்சிக்கு பாவிக்க முடியும். நுழைவாயிலில் நுழைவுச் சீட்டுகள் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுச் செயலாளர்
யாழ் விஞ்ஞானச் சங்கம்
யாழ். பல்கலைக்கழகம்.

(29742)

---

## வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? தொய்வு வியாதியா? சருமரோகமா? உடல் பருமனா? உடல் மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? குழந்தைகளின் ரோகங்களா? நாட்பட்ட வியாதிகளா? கவலை வேண்டாம் சிறந்த சிகிச்சையும் உரிய ஆலோசனையும் அளிக்கப்படும்.

தினமும் — காலை 8 30 - 12.30 வரை
பிற்பகல் 3 00 - 6.00 வரை

**டாக்டர் த. சிவானந்தன்**

"சிவா வைத்தியசாலை"
384, கோவில் வீதி, — நல்லூர் வடக்கு
(முடமாவடிச் சந்தி)

(29744)

---

## சாவகச்சேரி நகரசபை
## துவிச்சக்கர வண்டி, வாகன, மிருக வரி - 1994

1994 ஆம் ஆண்டுக்குரிய மேற்படி வரியை 31 - 03 - 94 க்கு முன்பதாகச் செலுத்தி உரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கின்றேன். உரிய இலக்கத் தகடுகள் வேலை நாட்களில் முற்பகல் 8 30 தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. நடராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
03 - 03 - 94.

(சி/7553)

---

## கணித, விஞ்ஞான வினா விடை போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவருக்கான கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டி எதிர்வரும் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

யாழ். கோட்ட ஆண்டு 6, ஆண்டு 8, ஆண்டு 10 மாணவர்களுக்கான போட்டி நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நல்லூர் கோட்ட ஆண்டு 7, 9, 11 மாணவர்களுக்கான போட்டி நாளை மறுதினம் 6 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

அதிபர்கள் தமது பாடசாலைப் போட்டியாளர்களை நேர ஒழுங்குக்கு அமைய அனுப்பி வைக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. புலேந்திரன் கோரி உள்ளார். (இ)

## நாளை

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூரில் நடைபெறும். (த)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கான கல்வி மேம்பாட்டு நிதிய அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் கலந்து கொள்வார். (ஒ-117)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பாடசாலை கற்பித்தல் சாதனங்களை விருத்தி செய்வதற்குரிய கணித, விஞ்ஞான பாட உபகரணப் போட்டிகள் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. புஸ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஒ-117)

## மலேரியாவுக்கு 2 குழந்தைகள் பலி

யாழ்ப்பாணம், மார்ச். 4

மலேரியாவினால் நேற்றும் நேற்று முன்தினமும் இரண்டு குழந்தைகள் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமாகினர்

யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த சந்திரன் குஜந்தினி (வயது 2) மற்றும் வடமராட்சி கொற்றாவத்தையைச் சேர்ந்த தவமணி என்பவரின் 7 நாள் குழந்தை ஆகியோரே மரணமடைந்த குழந்தைகள் ஆவர். (இ-115)

---

மாகாணசபை---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேல் மாகாணத்தில் உள்ள பிரதேச சபைப் பகுதிகளில் கருத்தரங்குகளை நடத்தும் முயற்சியில் மத்திய உள்நாட்டு மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவும் அவரது அமைச்சுச் செயலாளர் ஜஸ்டின் பெர்னாண்டோவும் ஈடுபட்டுள்ளனர் என்றும் —

அக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும்படி பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகளை அவர்கள் அழைத்துள்ளது, மாகாண விவசாய, கூட்டுறவு மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற முறையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடு என்றும்—

ஆகவே இப்படியான கருத்தரங்குகளை நடத்த மத்திய அமைச்சர் எடுத்த முடிவை நீதிமன்றம் ரத்துச் செய்ய உத்தரவிட வேண்டும் என்றும்—திரு. ரட்னசிறி விக்கிரமநாயக்கா சமர்ப்பித்த மனுவில் கூறியுள்ளார்.

பிரதிவாதியான மத்திய அமைச்சர் தமது பதில் மனுவில் மக்கள் அரசாங்கம் செவ்வனே குழப்பமின்றி செயல்படுவதை உறுதி செய்யுமுகமாகவே தாம் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மனு மீதான விசாரணையை மேன்முறையீடு நீதிபதி டபிள்யு. என். டி. பெரேரா மே மாதம் [illegible] திகதி ஒத்திவைத்தார். ([illegible])

# 30க்கும் மேற்பட்ட கொள்ளைகளில் முன்னாள் பொலீஸ் அதிகாரியின் மகன்!

கொழும்பு, மார்ச். 4

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் முப்பதுக்கு அதிகமான கொள்ளைகளில் சம்பந்தப்பட்டிருந்தார் எனச் சந்தேகிக்கப்படும், முன்னாள் பிரதிப்பொலீஸ்மா அதிபர் ஒருவரின் மகனை நாரஹேன்பிட்டி பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் தனி ஆளாகவே இக்கொள்ளைகளை நடத்தியிருந்தார் என்று கூறிய பொலீஸார்—

ஏராளமான திறப்புகள் அடங்கிய கோர்வையுடன் குடியிருப்பாளர்கள் அயர்ந்து நித்திரையில் இருக்கும் சமயம் சந்தேக நபர் வீடுகளுக்குள் நுழைந்து பொருள்களைக் கொள்ளையடித்து வந்தார் என்றும் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் தந்தையான முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் மிகமிக முக்கியமான பிரமுகர் ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை விற்றதால் கிடைத்த பணத்தைக் கொண்டு சந்தேக நபர் வீடு ஒன்றைக் கட்டியிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## மனையியல் ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

மனையியல் டிப்புளோமாத் தகுதியுடையோரை உதவி ஆசிரியர்களாக நியமிக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடெங்கும் உள்ள பாடசாலைகளில் நிலவும் தமிழ் மொழி மூலமான மனையியல் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கத் தேவையான விவரங்களையும், விண்ணப்பப்படிவத்தையும் யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி,2 ஆம் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் விளம்பர பணிமனையில் பார்வையிடலாம். (இ-3)

## வவுனியாவிலிருந்து தினமும் 100 லொறிகளில் பொருள்கள்
### குடாநாட்டுக்கு அனுப்பப்படுமாம்

கொழும்பு, மார்ச் 4

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் மத்திய களஞ்சியம் ஒன்றை வவுனியாவில் நிறுவுவதைத் தொடர்ந்து இராணுவம், குறைந்தது நூறு லொறிகளில் உணவுப் பொருள்களை நாளாந்தம் யாழ்ப்பாண குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கக் கூடியதாக இருக்குமாம்.

இத்தகவலை கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் தலைவர் எப். ஏ. யாஸீன் செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

புதிய கூ. மொ. வி. மத்திய களஞ்சியம் நேற்று முதல் வவுனியாவில் இயங்க ஆரம்பித்தது.

தற்போது 25 லொறிகளில் மட்டுமே உணவுப் பொருள்கள் யாழ் குடாவுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவித்த ஜனாப் யாஸீர்—

புதிய ஏற்பாட்டின் கீழ் உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் திரும்பி வரும் போது அவற்றில் யாழ். குடாவில் உள்ள பொருள்களை வாங்கி கொண்டு வருவதற்கு நாம் ஏற்பாடு செய்ய முடியும்"— என்றும் தெரிவித்தார்.

## பிரிட்டனில் புகலிடம் கோரி
## தடுப்பு காவலில் உள்ளோர் எண்ணிக்கை அதிகரிப்பு

லண்டன், மார்ச் 4

பிரிட்டனில் புகலிடம் கோரிவந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை கடந்த 6 மாதங்களில் இருமடங்காக அதிகரித்துள்ளது.

அகதிகளைக் கண்காணித்து வரும் புகலிடம் கோருவோர் உரிமைப் பிரசாரம் என்ற அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

சிறைக் கூடங்களுக்குப் பதிலாக விசேட தடுப்புக் காவல் நிலையங்களில் அவர்களுக்கு தங்கும் வசதி வழங்கப்படும் என்று அரசு வழங்கிய உறுதி நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அகதிகளுக்கு மருத்துவ சிகிச்சை உட்பட அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதாகவும் இந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

6 மாதங்களில் புகலிடம் கோரிய அகதிகளின் எண்ணிக்கை 317 இல் இருந்து 602 ஆக அதிகரித்துள்ளது என்றும்— இவர்களில் 400 பேர் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளில் பலர் 3 மாதங்களுக்கு மேல் சிறையில் இருந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது,

மருத்துவ சிகிச்சை தேவைப்படும் அகதிகளுக்கு அவ் வசதிகள் இன்னும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## கல்முனை பகுதியில் கடற்படை கப்பல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

பூநகரி—கல்முனைக்குச் சமீபமாகவுள்ள எழுத்துப்பிட்டி கடற்பகுதியில் நேற்றுக் காலை முதல் கடற்படையினரின் கப்பல் ஒன்று தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலைச் சுற்றி இரு படகுகள் ரோந்து சுற்றித் திரிவதை பாஷையூர் பகுதியில் இருந்து அவதானிக்க முடிந்தது

நேற்றுப் பகல் 11 மணியளவில் இக்கப்பலில் இருந்து கல்முனை கடற்பகுதியை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

---

புலிகள்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்கூர் சென்றதாகவும் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் ஜெயலலிதாவுக்கு எதிராக சுமத்திய முன்கண்ட குற்றச் சாட்டை நிரூபிக்க ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும்படி ஜெயின் ஆணைக்குழு டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியைக் கேட்டு இருந்தது.

அதற்கு — "ராஜீவ் படுகொலையுண்ட தினம் ஜெயலலிதா எங்கேயிருந்தார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" — என்று டாக்டர் சுவாமி ஜெயின் ஆணைக்குழுவிற்கு அனுப்பிய பதிலில் கூறியிருக்கிறார் (இ-எ)

## பொது எழுதுநர் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 4

அரச மற்றும் மாகாண அரச சேவையின் பொது எழுதுநர் சேவையின் இரண்டாம் வகுப்பின் 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-5)

## வட. கிழக்கு பிரச்சினைக்கு உடன் தீர்வு காண வேண்டும்
### அஸ்கிரிய மகாநாயக்கர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 4

வடக்கு-கிழக்கு பிரச்சினை இன்று முடியும் நாளை முடியும் என்று நாட்டின் சாதாரண மக்களைப் போல் பௌத்த பிக்குகளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது ஒரு முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. எனவே பொறுப்புள்ள, தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் இனிமேலும் காலம் கடத்தாமல் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர உற்சாகத்துடன் செயலாற்ற வேண்டும்.

அஸ்கிரிய மகாநாயக்கர் ஸ்ரீ சந்திரானந்த ஹிமி இவ்வாறு கூறினார்.

அண்மையில் விமானப் படைத் தளபதியாக பதவியேற்ற எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க, அஸ்கிரிய பீடாதிபதியிடம் ஆசிபெறச் சென்றபோதே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது;

விமானப்படைத் தளபதியாக பதவி ஏற்றுள்ள நீங்கள் வடக்கில் இடம்பெறும் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தி சமாதானத்தை ஏற்படுத்த பாடுபடுவீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் 24 ஆயிரம் சிங்களவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர் கூட இப்போ அங்கே இல்லை. பலர் கொல்லப்பட்டு விட்டார்கள். ஏனையோர் துரத்தி அடிக்கப்பட்டு விட்டனர். ஆனால் தமிழர்கள் சகல உரிமைகளுடனும் வசதிகளுடனும் நாடு முழுவதிலும் சிங்களவர்களுடன் சமமாக வாழ்கின்றனர்.

புலிகளுடன் பேச்சு நடத்துவதில் எந்தவித பிரயோசனமும் கிடையாது. இந்த நேரம் வரை பேச்சுவார்த்தைகளால் எந்தப் பிரயோசனமும் ஏற்படவில்லை. 10 வருடங்களுக்கு மேல் எங்கள் சிங்கள இளைஞர்கள் அழிந்ததும், நாட்டின் செல்வம் அழிந்ததும் தான் மிச்சம். இந்திய மக்களாலும் புலிகளை அடக்க முடியவில்லை என்றார். (த-9)

## நல்லின காளைகள் இறக்குமதி

முல்லை மாவட்டத்தில் மன்னா கண்டல் பகுதியில் நல்லின மாடுகளை உருவாக்கும் பொருட்டு கொழும்பிலிருந்து இரண்டு நல்லின காளைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக்குழுவினர் இறக்குமதி செய்துள்ளனர்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு காளைகளையும் கொண்டு கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காளை சேவை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் அப்பகுதி மக்களுக்கு இந்த நிலையம் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஆக்கஓவிய போட்டி

அனைத்து ஆசிரியர்களுக்குமான ஆக்க ஓவியப்போட்டி எதிர் வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை யாழ். பரியோவான் அக்கடமி (ஊர்காவற்றுறை, வேலணை) யாழ். இந்துக் கல்லூரி (யாழ்ப்பாணம், நல்லூர்) சாவகச்சேரி மகளிர் கல்லூரி (சாவகச்) ஆகிய இடங்களில் நடைபெறும். (எ)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கட்டாக்காலி நாய் பிடிப்பவர் பதவி
(தரகு அடிப்படையில்)

இம்மாநகராட்சி மன்றத்தின் சுகாதாரப்பகுதியில் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பவராகக் கடமை புரிவதற்கு விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 40 வயதிற்குட்பட்டவராகவும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

பிடிக்கப்படும் ஒவ்வொரு நாயையும் நீரில் அமிழ்த்திக் கொல்லல் வேண்டும். இதற்குத் தாங்கள் கோரும் கட்டணத்தை விண்ணப்பதாரர் தங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது வயது, அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலம், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 15.03 1994 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

—ஆணையாளர்

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
03-03-94

(சி-7552)

---

## மரண அறிவித்தல்
### செல்லம்மா கனகசபை

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லம்மா கனகசபை (3-3-1994) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை (இளைப்பாறிய ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா, திருமதி பத்மநாதன் தெய்வானைப்பிள்ளை, வவா (இளைப்பாறிய ஆசிரியை, அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை), பொன்னையா, இராசையா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெருமாக்கடவையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (4-3-1994) 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா. நிர்மலா (மருமகள்)
ந. வாகீசன் (டினேஷ்)

பெருமாக்கடவை,
அளவெட்டி.

(29743)

---

## அஷ்ரப்புக்கு ஆதரவாக...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் தோற்றாலும், தாம் எம். பி பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் முன்னர் அறிவித்திருந்தார்.

தேர்தலில் ஆறு பிரதேச சபைகளில் நான்கில் மட்டுமே முஸ்லிம் காங்கிரசினால் வெற்றியீட்ட முடிந்தது.

[illegible] எம். பி. பதவியை இராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (ஒ-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் காங்கேசன் வீதி, 392/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org